1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கோரிக்கை விடப்பட்டது உண்மை. ஆனால் அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப் படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முயற்சியில் தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க அரசு பரிசீலிக்கும என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சலுகை ஓரளவுக்கு நாம் செய்கிறோம். மேலும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பது என்பது வேறு, இன்ஜினியர்கள், டாக்டர்களை ஊக்கு விப்பது என்பது வேறு. விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதற்காக எல்லாவிதமான ஆதரவும் தரப் படுகிறது.

பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி.

* வினா எண் 27–திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகநேரி பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

(ஆ) அந்தப் பள்ளியின் அங்கீகாரம் இடையில் ஏன் ரத்து செய்யப்பட்டது?

(இ) மீண்டும் அங்கீகாரம் எப்பொழுது கொடுக்கப் பட்டது?

(ஈ) இப்பொழுது அங்கு எத்தனை ஆசிரியர்கள் வேலை பார்க்கின்றனர்?

(உ) எத்தனை மாணவர்கள் படிக்கின்றனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 90 ஆண்டுகள்.

(ஆ) இப்பள்ளியில் பணி புரிந்து வேலை நீக்கம் செய்யப் பட்ட தலைமையாசிரியரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளு மாறு, மேல் முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவைப்பள்ளி நிர்வாகம் நிறைவேற்றாத காரணத்தால் விதி களின்படி இப்பள்ளியின் அங்கீகாரம் 11-1-78 முதல் ரத்து செய்யப்பட்டது.

(இ) 1980-81 கல்வி ஆண்டு முதல் அங்கீகாரம் மீண்டும் வழங்கப்பட்டது.

(ஈ) ஒன்பது ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள்.

(உ) 238 மாணவர்கள் படிக்கின்றனர்.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். என். இராமசாமி : தலைவர் அவர்களே, பேயன் விளை இந்து ஆரம்பப் பள்ளியில் ஒன்பது ஆசிரியர்கள் பணி புரிந்தாலும்கூட அங்கே பணிபுரிகின்ற மூன்று ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது. சம்பளம் கிடைக்காத அந்த ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு உடனே செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவு இடங்களைத் தருகிறோமோ அந்த இடங்களிலே ஆசிரியர்களை நியமிக்கிறபோது அதற்கான சம்பளத்தை மட்டும் கொடுப்பதற்கான பொறுப்பைத்தான் அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை மீறி அவர்கள் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியது அந்த நிர்வாகத்தினுடைய பொறுப்பு, அந்த ஆசிரியர்களுடைய பொறுப்பு. சட்டமன்றத்திலே நாம் ஆண்டுதோறும் அனுமதிக்கின்ற இடங்களைப் பல்வேறு மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கிறோம். அந்த முறையிலே 1,2 இடங்களுக்குத்தான் தர முடியுமே தவிர, அவர்கள் நியமித்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு எல்லாம் நாம் சம்பளம் தரமுடியாது.

பள்ளிகளில் புவியியல் பாடம் கற்பிக்க நியமிக்கப்படும் ஆசிரியர்கள்.

* வினா எண் 28—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் புவியியல் (Gecgraphy) பாடம் கற்பிக்க புவியியல் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களையே நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப்பள்ளிகளில் புவியியல் பாடம் தனிப்பாடமாக வைக்கப்படாமல் வரலாறு பாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாடத்திற்கு ஒரு ஆசிரியர்தான் நியமனம் செய்யலாம். அவர் பட்டப்படிப்பில் வரலாறு அல்லது புவியியல் படித்திருக்க வேண்டும்.

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS